**திருவேல் அகாடமி**
***TNPSC Gr-2, 2A முதனிலை & முதன்மைத் தேர்வு – 2022***
**திருவண்ணாமலை**
***97901 46151 / 88707 60558 / 86673 31004***

**மாதிரித் தேர்வு - 6**

*{6, 7, 8 -வது தமிழ், ஜனவரி - 2022 மாத நடப்பு நிகழ்வு, Unit – 7 இந்திய தேசிய இயக்கம் ( 6 - 12), தர்க்க & பகுத்தறிவு கணக்குகள் (Logical & Reasoning)}*

1. ‘ஒன்றுறா முன்றிலோ இல்’ என்ற பழமொழியின் பொருள்.
   A)ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன
   B)ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை
   C)அனைத்தும் வீட்டில் உள்ளது
   D)வீட்டில் இருப்பது ஏதும் நாட்டில் இல்லை
   E)விடை தெரியவில்லை

2. தவறான இணையைத் தேர்வு செய்க.
   A)புலி - உறுமும்
   B)சிங்கம் - முழங்கும்
   C)ஆடு - கதறும்
   D)யானை - பிளிறும்
   E)விடை தெரியவில்லை

3. பொருத்துக.
   1)புகாவாக அ)கடல்
   2)மாரி ஆ)உணவு
   3)தகளி இ)மழை
   4)ஆழி ஈ)அகல்விளக்கு

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஆ | ஈ | இ | அ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | ஈ | இ | ஆ | அ |

   E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

4. சரியான இணையைத் தேர்வு செய்க.

A) புலி - குருளை

B) சிங்கம் - பறழ்

C) யானை - கன்று

D) பசு - குட்டி

E) விடை தெரியவில்லை

5. கூற்று : தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன.
காரணம் : ஆதிச்சநல்லூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும், இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

A) கூற்று காரணம் இரண்டும் சரி. மேலும் சரியாக பொருந்தியுள்ளது.

B) கூற்று சரி, காரணம் தவறு

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று காரணம் இரண்டும் தவறு

E) விடை தெரியவில்லை

6. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்.

A) அ, ஆ

B) இ, ஈ

C) உ, ஊ

D) எ, ஏ

E) விடை தெரியவில்லை

7. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வழங்கப்பட்ட வேறுபெயர்.

A) வேணுவனம்

B) மூங்கில்காடு

C) வேலிவனம்

D) வேளிவனம்

E) விடை தெரியவில்லை

**மாதிரித் தேர்வு - 6**

8. கூற்று அ: ”திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி” என்று சேக்கிழார் பாடியுள்ளார்.
கூற்று ஆ: ”தண்பொருநை புனல் நாடு” என்று கம்பரும் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.
A)கூற்று அ & ஆ இரண்டும் சரி.
B)கூற்று அ சரி, ஆ தவறு
C)கூற்று அ தவறு, ஆ சரி
D)கூற்று அ & ஆ தவறு
E)விடை தெரியவில்லை

9. தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பது.
A)பாளையங்கோட்டை
B)சேரன்மாதேவி
C)செங்கோட்டை
D)திருநெல்வேல்
E)விடை தெரியவில்லை

10. காவடிச்சிந்தைப் பாடியவர்.
A)நமச்சிவாயப் புலவர்
B)பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
C)அருணகிரிநாதர்
D)அண்ணாமலையார்
E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

11. 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் தமது வீட்டில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தவர்.

A)கவிமணி தேசிக விநாயகனார்

B)இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர்

C)பாவேந்தர் பாரதிதாசன்

D)திரு.வி.கலியாணசுந்தரனார்

E)விடை தெரியவில்லை

12. கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள்களில் எடுத்துக்காட்டு உவமை அணியைத் தேர்வு செய்க.

A)அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

B)தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

C)சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

D)தீயினால் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

E)விடை தெரியவில்லை

13. Civilization என்ற சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல் தருக.

A)சமூகம்

B)பண்பாடு

C)நாகரிகம்

D)கட்டமைப்பு

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

14. பைங்கூழ் என்பதன் பொருள்

A)வேண்டாத செடி

B)விதை

C)பசுமையான பயிர்

D)சிறந்த உணவு

E)விடை தெரியவில்லை

15. அகரவரிசைப்படுத்துக.

A)எழுத்து, சொல், அசை, சீர், தளை, அடி, தொடை, விகற்பம்

B)அடி, அசை, எழுத்து, சீர், சொல், தளை, தொடை, விகற்பம்

C)அசை, அடி, எழுத்து, சீர், சொல், தளை, தொடை, விகற்பம்

D)எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, விகற்பம், சொல்

E)விடை தெரியவில்லை

16. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)மயில் - அகவும்

B)புறா - குழறும்

C)சேவல் - கூவும்

D)கிளி - பேசும்

E)விடை தெரியவில்லை

17. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)எளிது - அரிது

B)ஈதல் - ஏற்றல்

C)இரவலர் - செல்வந்தர்

D)அந்நியர் - உறவினர்

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

18. பொய்கையாழ்வார் பிறந்த ஊரின் பெயர்.

A)திருசிரபுரம்

B)திருக்கோயிலூர்

C)திருமயிலை

D)திருவெஃகா

E)விடை தெரியவில்லை

19. ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'' பயின்றுவந்துள்ள அணி.

A)உருவக அணி

B)உவமையணி

C)ஏகதேச உருவக அணி

D)இல்பொருள் உவமை அணி

E)விடை தெரியவில்லை

20. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

A)உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்

B)உலகம் வாழட்டும் உள்ளவரையிலும் தமிழ்மொழி

C)தமிழ்மொழி வாழட்டும் உலகம் உள்ளவரையிலும்

D)உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்

E)விடை தெரியவில்லை

21. தொடரைப் படித்து சரியான வினா எழுதுக.
கயல்விழி தன் தோழியுடன் வெள்ளிக்கிழமை காலையில் தொடர்வண்டியில் ஏறிக் கல்லூரிக்குச் சென்றாள்.

A)கயல்விழி கல்லூரிக்கு எப்படிச் சென்றாள்

B)கயல்விழி கல்லூரிக்கு எப்படிச் சென்றாள்?

C)கயல்விழி என்ன செய்தாள்?

D)கயல்விழி எப்படி கல்லூரிக்குச் செல்வாள்?

E)விடை தெரியவில்லை

22. தலைப்புச் செய்திகள்: தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடக்கம் – வானிலை மையம் அறிவிப்பு. முழு சொற்றொடர்களாக எழுதுக.

A)தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

B)வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தொடங்கும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

C)வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அரிவித்துள்ளது.

D)பருவமழை தமிழகத்தில் தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

E)விடை தெரியவில்லை

23. Articulatory Phonetics - ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தருக.

A)மெய்யொலி

B)மூக்கொலி

C)ஒலிப்பிறப்பியல்

D)ஒலியன்

E)விடை தெரியவில்லை

24. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

A)நான் + என்ப

B)நா + டென்ப

C)நாடு + என்ப

D)நாடு + டென்ப

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

25. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர்.

A)வாணிதாசன்

B)வண்ணதாசன்

C)தமிழன்பன்

D)கல்கி

E)விடை தெரியவில்லை

26. பொருத்துக.

| | |
|---|---|
| 1)இயேசு காவியம் | அ)டி.கே.சி. |
| 2)அறநெறிச்சாரம் | ஆ)முனைப்பாடியார் |
| 3)இதய ஒலி | இ)கண்ணதாசன் |
| 4)பாய்மரக்கப்பல் | ஈ)பாவண்ணன் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஆ | அ | ஈ |
| B) | ஆ | அ | இ | ஈ |
| C) | ஆ | இ | அ | ஈ |
| D) | அ | இ | ஆ | ஈ |

E)விடை தெரியவில்லை

27. 'தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்' என்று போற்றியவர்.

A)பெரியார்

B)அண்ணா

C)கலைஞர்

D)எம்.ஜி.ஆர்

E)விடை தெரியவில்லை

28. பொருத்துக.

| | |
|---|---|
| 1) மல்லிகை சூடினாள் | அ) பண்பாகுபெயர் |
| 2) திசம்பர் சூடினாள் | ஆ) தொழிலாகுபெயர் |
| 3) இனிப்பு தின்றான் | இ) பொருளாகுபெயர் |
| 4) பொங்கல் உண்டான் | ஈ) காலவாகுபெயர் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | ஆ | அ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | இ | அ | ஆ | ஈ |
| D) | ஈ | இ | அ | ஆ |

E) விடை தெரியவில்லை

29. பொருத்தமில்லாத ஒன்றைத் தேர்வு செய்க.

A) மண்

B) மரம்

C) கரும்பலகை

D) காற்று

E) விடை தெரியவில்லை

30. சரியான இணைப்புச் சொல்லால் எழுதுக.

"அண்ணா அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர் _______ அவர் எளிமையை விரும்பியவர்"

A) எனவே

B) ஏனெனில்

C) அதனால்

D) ஆகையால்

E) விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

31. ஓடை + ஆட = என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது.

A)ஓடைஆட

B)ஓடையோட

C)ஓடையாட

D)ஓடைவாட

E)விடை தெரியவில்லை

32. தாங்கள் பேசும் மொழியை 'ஆல்அலப்பு' என்று அழைப்பவர்கள்.

A)தோடர்கள்

B)இருளர்கள்

C)களப்பிரர்கள்

D)காடர்கள்

E)விடை தெரியவில்லை

33. எழுதுமின் – இலக்கணக்குறிப்பு தருக.

A)வியங்கோள் வினைமுற்று

B)வினைமுற்று

C)குறிப்பு வினைமுற்று

D)ஏவல் வினைமுற்று

E)விடை தெரியவில்லை

34. பதினெட்டு என்பதன் தமிழ் எண்.

A)கஅ

B)கஎ

C)கச

D)ககூ

E)விடை தெரியவில்லை

35. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். என்பது எவ்வகை வாக்கியம்?

A)வினாத்தொடைர்

B)விழைவுத்தொடர்

C)செய்தித்தொடர்

D)உணர்ச்சித்தொடர்

E)விடை தெரியவில்லை

36. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)மலையின் உயரம்தான் என்னே! - வியப்பு

B)புலி வருகிறது - அச்சம்

C)பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே! - ஏக்கம்

D)அடடா! என் தங்கை பரிசு பெற்றாள் - உவகை

E)விடை தெரியவில்லை

37. நேற்று நம் ஊரில் மழை பெய்தது. வினாத் தொடராக மாற்றுக.

A)மழை வந்ததா?

B)நேற்று என்ன வந்தது?

C)நேற்று மழை வருமா?

D)நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

E)விடை தெரியவில்லை

38. உறங்கினாள் – வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

A)உற

B)உறங்கி

C)உறங்கு

D)உறங்க

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

39. ''விலங்கொடு ________மக்கள் அனையர் ___________
கற்றாரோடு ஏனை யவர்'' கோடிட்ட இடங்களை நிரப்புக.

A) மக்கள், மாக்கள்

B) மக்கள், இலங்குநூல்

C) இலங்குநூல், மக்கள்

D) களர், அனையர்

E) விடை தெரியவில்லை

40. பாடும் பாடல் – இலக்கணக் குறிப்பு தருக.

A) முற்றெச்சம்

B) பெயரெச்சம்

C) வினையெச்சம்

D) எதிர்காலப் பெயரெச்சம்

E) விடை தெரியவில்லை

41. 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' என்னும் உவமையின் பொருள்.

A) வெளிப்படை

B) மறைவு

C) எளிமை

D) மிகுதி

E) விடை தெரியவில்லை

42. தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல் – பயின்று வந்துள்ள வேற்றுமை .

A) இரண்டாம் வேற்றுமை

B) மூன்றாம் வேற்றுமை

C) நான்காம் வேற்றுமை

D) ஐந்தாம் வேற்றுமை

E) விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

43. 'முல்லை பானையை வனைந்தாள்' இத்தொடர் ______ பொருளைக் குறிக்கிறது.

A)ஆக்கல்

B)அழித்தல்

C)கொடை

D)அடைதல்

E)விடை தெரியவில்லை

44. அகர வரிசைப்படுத்துக.

A)மா, மலர், கனி, குருவி, காய், இலை, தேன்

B)தேன், மலர், மா, காய், கனி, குருவி, இலை,

C)இலை, கனி, காய், குருவி, தேன், மலர், மா

D)இலை, கனி, காய், குருவி, தேன், மா, மலர்

E)விடை தெரியவில்லை

45. தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.

A)அப்பர்

B)சுந்தரர்

C)மாணிக்கவாசகர்

D)ஞானசம்பந்தர்

E)விடை தெரியவில்லை

46. ''உலகத்தைக் குழந்தைகளின் கண்கொண்டு பாருங்கள். உலகம் அழகானது'' என்று குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிராகப் போராடியவர்.

A)அன்னை தெரேசா

B)கைலாஷ் சத்தியார்த்தி

C)வள்ளலார்

D)டாக்டர்.இராதாகிருஷ்ணன்

E)விடை தெரியவில்லை

47. பொருததமில்லாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)ஆறு

B)திங்கள்

C)ஓடு

D)நடி

E)விடை தெரியவில்லை

48. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)தெரு

B)கை

C)கிளை

D)இலை

E)விடை தெரியவில்லை

49. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்சொல்

A)அழிவு

B)துன்பம்

C)சுறுசுறுப்பு

D)சோகம்

E)விடை தெரியவில்லை

50. முன்றுறை அறையானர் _________ நூலுடன் தொடர்புடையவர்.

A)பழமொழி நானூறு

B)முதுமொழிக்காஞ்சி

C)திரிகடுகம்

D)இன்னிலை

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

51. கூற்று 1: திராவிட இயக்கத்தைப் பற்றி ஆவணப்படுத்திய வரலாற்றாசிரியர் கே.திருநாவுக்கரசு அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்பட்டுள்ளது.

கூற் 2 : 2021 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு அவர்களுக் வழங்கப்பட்டுள்ளது.

A)கூற்று 1 மற்றும் 2 சரி

B)கூற்று 1 மட்டும் சரி

C)கூற்று 2 மட்டும் சரி

D)கூற்று 1 மற்றும் 2 தவறு

E)விடை தெரியவில்லை

52. 2022 ஆம் ஆண்டு ரவுல் வாலன்பெர்க் பரிசைப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழக பத்திரிகையாளர்.

A)ஆரோக்கியசாமி வின்செண்ட் ராஜ்

B)ஐயப்பன் இராமசாமி

C)கரிகாலன்

D)பேராசிரியர்.சுந்தரவள்ளி

E)விடை தெரியவில்லை

53. பினா – பாங்கி பல்மாதிரி குழாய் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் இந்திய ஒன்றிய மாநிலங்கள் முறையே.

A)மத்தியபிரதேசம், பீகார்

B)உத்தரப்பிரதேசம், பீகார்

C)மத்தியப்பிரதேசம், உத்திரபிரதேசம்

D)ஒடிஸா, மத்தியபிரதேசம்

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

54. கூற் 1. பிரம்மோஸ் என்பது இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் ரஷ்யாவின் NPOM அமைப்பு ஆகியவற்றின் ஒரு கூட் முயற்சி ஆகும்.

கூற்று 2. இது ஒரு வான்வெளி ஏவுகணை ஆகும்.

கூற் 3. இந்தியாவின் பிரம்மபுத்திரா நதி மற்றும் ரஷ்யாவின் மோஸ்க்வா நதி ஆகியவற்றிலிருந் பெயரிடப்பட்டது.

கூற்று 4. இந்தியாவின் லக்னோவில் இதன் தலைமையிடம் அமைந்துள்ளது.

தவறல்லாத கூற் / கூற்று களைத் தேர்வு செய்க.

A)கூற்றுகள் 1, 2, 4 மட்டும்

B)கூற்று 4 மட்டும்

C)கூற்றுகள் 1, 2, 3 மட்டும்

D)கூற்று 3 மட்டும்

E)விடை தெரியவில்லை

55. மிலன் என்னும் பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சியின் கருத்துரு.

A)பாதுகாப்பு, ஒத்துழைப்பு, ஒற்றுமை

B)ஒத்துழைப்பு, பாதுகாப்பு மற்றும் ஒற்றுமை

C)தோழமை, ஒற்றுமை மற்று பாதுகாப்பு

D)தோழமை, ஒற்றுமை மற்று ஒத்துழைப்பு

E)விடை தெரியவில்லை

56. 'காலர்வாலி' என்று பிரபலமாக அறியப்படும் இந்தியாவின் 'சூப்பர்மாம்'

A)புலி

B)சிங்கம்

C)யானை

D)வெள்ளை யானை

E)விடை தெரியவில்லை

**மாதிரித் தேர்வு - 6**

57. எத்தனால் குறித்த தரவுகளை கவனமாக ஆய்க.

எத்தனால் கலவை வீத்ததினை விரிவுபடுத்தச் செய்வதில் இந்தியா ஒரு 'பெரும் முன்னேற்றத்தினை' அடைந்துள்ளதாக சர்வதேச எரிசக்தி முகமை கூறுகிறது.

அ. 2017 ஆம் ஆண்டில் பின்பற்றிய எத்தனால் கலப்பு வீதம் 2% ஆகும்.

ஆ. 2021 ஆம் ஆண்டில் இது 8% ஆக உயர்ந்தது.

இ.2022 ஆம் ஆண்டில் 10% கலப்பு வீதத்தினை இந்தியா எட்டுவது சாத்தியம் ஆகும்.

ஈ.2030 ஆம் ஆண்டில் இதே நிலைத் தொடர்ந்தால் எத்தனால் கலப்பு வீதம் 30% ஐ எட்டு .

A) இ மற்றும் ஈ இல் உள்ள தரவுகளில் பிழை உள்ளது

B) ஈ இல் உள்ள தரவுகளில் மட்டு பிழை உள்ளது

C) அ, ஆ தரவுகளில் மட்டு பிழை இல்லை

D) அனைத்துத் தரவுகளிலும் பிழையாக உள்ளன.

E) விடை தெரியவில்லை

58. இந்தியாவையும் நேபாளத்தையும் இணைக்கும் வகையிலான ஒரு புதிய ஆற்றுப் பாலத்தினைக் கட்டமைக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான பணி அமையவிருக்கும் ஆற்றின் பெயர்.

A) மகாகாளி

B) பிரம்மபுத்திரா

C) சார்ஜு நதி

D) பாணர் நதி

E) விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

59. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானத்தின் (ISRO) புதிய தலைவர் மற்றும் விண்வெளிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர்.

A)டாக்டர்.சிவன்

B)டாக்டர்.ரவி கிருஷ்ண தேஜா

C)டாக்டர்.S.சோமநாத்

D)டாக்டர்.கிருஷ்னகுமார்

E)விடை தெரியவில்லை

60. காசிரங்கா தேசியப் பூங்கா அமைந்துள்ள இடம்.

A)அஸ்ஸாம்

B)ஒடிஸா

C)மத்தியப்பிரதேசம்

D)அருணாச்சலப்பிரதேசம்

E)விடை தெரியவில்லை

61. இந்தியாவின் முதல் ரஃபேல் பெண் விமானி என்ற சிறப்பு பெற்றவர்.

A)விமானி சந்தியா செல்வமணி

B)விமானி விஜயா சிங்

C)விமானி கமலா பரித்

D)விமானி சிவாங்கி சிங்

E)விடை தெரியவில்லை

62. நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதியினை ஒன்றிய அரசு ______ தினமாக கொண்டாடப்படுவதற்கு முடிவு செய்துள்ளது.

A)வீர் பராக்கிரம் திவாஸ்

B)பராக்கிரம் திவாஸ்

C)ஜெய்ஹிந்த் திவாஸ்

D)பூர்ண சுவராஜ் திவாஸ்

E)விடை தெரியவில்லை

63. 2022 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது தமிழில் அம்பை என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. நூலின் பெயர்.

A)கொடி முல்லை

B)சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை

C)அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை

D)வெண்முகில்கள் காய்ந்து போவதில்லை

E)விடை தெரியவில்லை

64. கூட்டாக் நிலத்தை வைத்துக் கொண்டு குண் கட்டி என்ற முறையில் விவசாயம் செய்வதில் பெயர்பெற்றவர்கள்.

A)கோல் இனமக்கள்

B)சாந்தலர்கள்

C)முண்டா இனமக்கள்

D)பார்சி இனமக்கள்

E)விடை தெரியவில்லை

65. பொருத்துக.

| | |
|---|---|
| 1)கான்பூர் | அ)கான் பகதூர் |
| 2)லக்னோ | ஆ)பேகம் ஹஸ்ரத் மகால் |
| 3)பரேலி | இ)நானா சாகிப் |
| 4)ஜான்சி | ஈ)லட்சுமி பாய் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | அ | ஈ | ஆ | இ |
| C) | இ | ஆ | அ | ஈ |
| D) | இ | அ | ஆ | ஈ |

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

66. நீல் தர்ப்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை ____ என்பவர் எழுதினார்.

A)கன்வர் சிங்

B)ரனஜித் குகா

C)எ.ஓ.ஹியூம்

D)தீன் பந்து மிஸ்ரா

E)விடை தெரியவில்லை

67. முதல் உலகப்போரும், இந்தியா அந்தப் போரில் பங்கேற்றதும் தான் தன்னாட்சி இயக்கத்துக்கான பின்னணியாகும்.

கூற்று 1. 1914 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார்.

கூற்று 2. 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அன்னிபெசண்ட் அம்மையார் காங்கிரஸ் ஆதரவின்றி ஆரம்பிக்க முடிவு செய்தார்.

A) கூற்று 1 மற்றும் 2 சரி

B)கூற்று 1 மற்றும் 2 தவறு

C)கூற்று 2 மட்டும் சரி

D)கூற்று 1 மட்டு சரி

E)விடை தெரியவில்லை

68. பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கக் காரணம்.

A)சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனை

B)சட்டசபையில் பிராமணர் அல்லாதோருக்கு பிரிதிநிதித்துவம்

C)காங்கிரஸில் இருந்து வெளியேற்றம்

D)மேற்கண்ட அனைத்தும்

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

69. நீதிக்கட்சி மற்றும் அதன் சாதனைகளைப் பொருத்துக.

| | |
|---|---|
| 1)1924 | அ) பனகல் அரசர் தலைமையில் அமைச்சரவை |
| 2)1929 | ஆ) பணியாளர் தேர்வுக்குழு |
| 3)1926 | இ) பொதுப்பணியாளர் தேர்வாணையம் |
| 4)1923 | ஈ) இந்து சமய அறநிலையத்துறை |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | ஆ | இ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | அ | இ | ஆ | ஈ |
| D) | ஆ | இ | ஈ | அ |

E) விடை தெரியவில்லை

70. ராஜாஜி தமிழகத்தில் முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக _____ இல் அறிமுகம் செய்தார்.

A) சென்னை

B) திருவள்ளூர்

C) சேலம்

D) திருச்சி

E) விடை தெரியவில்லை

71. பாரத மாதா சங்கம் என்னும் ரகசிய அமைப்ப தொடங்கியவர்.

A) சுப்பிரமணியம்

B) நீலகண்ட பிரம்மச்சாரி

C) B.P. வாடியா

D) சி. நட்டேசனார்

E) விடை தெரியவில்லை

72. பொருத்துக.

| | |
|---|---|
| 1)பெரியார் | அ)வைக்கம் வீரர் |
| 2)தாளமுத்து | ஆ)நீல் சிலையை அகற்றுதல் |
| 3)சென்னைவாசிகள் சங்கம் | இ)இந்தி எதிர்ப்பு |
| 4)எஸ்.என்.சோமையாஜுலு | ஈ)சித்திரவதை ஆணையம் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஈ | இ | அ | ஆ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | அ | இ | ஆ | ஈ |

E)விடை தெரியவில்லை

73. 1834 – 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர்.

A)டி.பி.மெக்காலே

B)கர்சன் பிரபு

C)ரிப்பன் பிரபு

D)பெண்டிங் பிரபு

E)விடை தெரியவில்லை

74. கூற்று : 1852 பிப்ரவரி 26 இல் சென்னை வாசிகள் சங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

காரணம் : மக்களை ஒருங்கிணைத்து பிராமணர்களுக்கு ஆதரவாக, அவர்களது கோரிக்கைகளை எடுத்துரைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளில் இது ஒன்றாகும்.

A)கூற்று சரி காரணம் தவறு

B)கூற் தவறு காரணம் சரி

C)கூற்று காரணம் இரண்டும் சரி.

D)கூற்று காரணம் இரண்டும் தவறு

E)விடை தெரியவில்லை

75. 'இந்தியாவில் வறுமையும் பிரிட்டீஷ் தன்மையற்ற ஆட்சியும்' (Poverty and UnBritish Rule in India -1901) எனும் புத்தகத்தை எழுதியவர்.

A)சுரேந்திரநாத் பானர்ஜி

B)பாலகங்காதர திலகர்

C)தாதாபாய் நௌரோஜி

D)டாக்டர்.அம்பேதகர்

E)விடை தெரியவில்லை

76. பொருத்துக.

| | |
|---|---|
| 1)திலகர் | அ)இந்தியாவின் குரல் |
| 2)தாதாபாய் நௌரோஜி | ஆ)மெட்ராஸ் டைம்ஸ் |
| 3)மெக்காலே | இ)கேசரி |
| 4)வில் யம் டிக்பை | ஈ)இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்: |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | அ | இ | ஈ | ஆ |

E)விடை தெரியவில்லை

77. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க.

i)கிழக்கிந்தியக் கழகம்

ii)சென்னை மகாஜன சங்கம்

iii)சென்னை வாசிகள் சங்கம்

iv)இந்தியச் சங்கம்

A) i, iv, iii, ii

B) iii, iv, i, ii

C) ii, i, iii, iv

D) iii, iv, i, ii

E)விடை தெரியவில்லை

78. தாகூர் குறித்த செய்திகளில் பிழையான ஒன்றைத் தேர்வு செய்க.

A)ஆத்ம சக்தி என்னும் (சுய உதவி) ஆக்கத் திட்டத்தினை அவர் கோடிட்டுக் காட்டினார்.

B)சுய பொருளாதார வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார்

C)கல்வியானது தாய்மொழியிலும் ஆங்கில மொழியிலும் வேண்டுமென வற்புறுத்தினார்.

D)ஆத்ம சக்தி எனும் செய்தியை மக்களிடம் பரப்புவதற்கு மேளாக்கள் எனும் திருவிழாக்களைப் பயன்படுத்த அவர் அழைப்பு விடுத்தார்.

E)விடை தெரியவில்லை

79. வட்டார மொழியில் கல்வி எனும் கருத்தை உருவாக்கிய கழகம்.

A)விடிவெள்ளிக் கழகம்

B)சுதேசி கழகம்

C)சென்னைப் பல்கலைக்கழகம்

D)பம்பாய் பல்கலைக்கழகம்

E)விடை தெரியவில்லை

80. ஃபராசி இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு.

A)1818

B)1827

C)1857

D)1853

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

81. சுதந்திர தொழிலாளர் கட்சியை 1937 லும், பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை 1942 – லும் தொடக்கியவர்.

A)அயோத்திதாசர்

B)எம்.சி.ராஜா

C)டாக்டர்.அம்பேத்கர்

D)ஜோதிபா பூலே

E)விடை தெரியவில்லை

82. சிட்டகாங் ஆய்தப் படைத்தளத்தைத் துணிகரமாகத் தாக்கியவர்.

A)ராஜகுரு

B)சுக்தேவ்

C)ஜதீந்த்ரநாத் தாஸ்

D)கல்பனா தத்

E)விடை தெரியவில்லை

83. 1923 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன்முறையாக மே தினத்தைக் கொண்டாடியவர்.

A)திலகர்

B)எம்.சிங்காரவேலர்

C)சிலம்புச் செல்வர்

D)திரு.வி.க.

E)விடை தெரியவில்லை

84. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய மண்ணி  முறைப்படி 1925 ஆம் ஆண்டு ______ இல் தொடங்கப்பட்டது.

A)கொல்கத்தா

B)பம்பாய்

C)சென்னை

D)டெல்லி

E)விடை தெரியவில்லை

85. அலிகார் இயக்கத்தின் நிறுவனர்.

A)எல்பின்ஸ்டோன்

B)சர்.சையது அகமது கான்

C)நவாப் கலிமுல்லா

D)லால் சந்த்

E)விடை தெரியவில்லை

86. 11, 13, 17, 19, ?

A)21

B)22

C)23

D)29

E)விடை தெரியவில்லை

87. b_ _ a b a b a _ a b _ என்ற தொடரில் விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி தொடரைப் பூர்த்தி செய்க.

A)a b a b

B)a b b b

C)a b b a

D)b a b a

E)விடை தெரியவில்லை

88. A1, C4, F9, K16, ?

A)Q25


B)R64

C)S25

D)R25

E)விடை தெரியவில்லை

89.



செவ்வகங்களின் எண்ணிக்கையைக் கண்டறிக.

A)40

B)50

C)44

D)52

E)விடை தெரியவில்லை

90. ADD என்பது = 3 எனில், CIM என்பது குறியிடப்படும் விதம்.

A)4

B)2

C)6

D)5

E)விடை தெரியவில்லை

91. $(2191)^{4163}$ – ஒன்றாம் இலக்க யாது?

A)1

B)3

C)5

D)2

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 6

92. $P = \frac{3}{5}$, $q = \frac{7}{9}$, $r = \frac{5}{7}$ எனில்

A) $p < q < r$

B) $q < r < p$

C) $p < r < q$

D) $r < q < p$

E) விடை தெரியவில்லை

93. $3\frac{1}{4} + 4\frac{1}{6} + ? + \frac{1}{4} = 10$

A) $2\frac{2}{6}$

B) $4\frac{1}{3}$

C) $1\frac{1}{3}$

D) $2\frac{1}{3}$

E) விடை தெரியவில்லை

94. ஒரு ஓட்டப்பந்தயத்தில் P, Q, R, S, T ஆகியோர் கலந்து கொண்டனர். P ஆனவர் Q – க்கு முன்னதாகவும், ஆனால் R-க்கு பின்னதாகவும் வருகிறார். S ஆனவர் T – க்கு முன்னதாகவும் Q-க்கு பின்னதாகவும் வருகிறார் எனில் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் யார்?

A) P

B) T

C) R

D) S

E) விடை தெரியவில்லை

95. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைக் கவனமாகப் படித்து தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

கண்ணன், ராஜீவை விட உயரமானவர், ஆனால் அஜித்தைவிடை குள்ளமானவர். விஜய் அஜித்தை விடை உயரமானவர். ஆனால், அமரை விட குள்ளமானவர்.

A)மிகவும் உயரமானவர் அமர்

B)மிகவும் குள்ளமானவர் ராஜீவ்

C)அஜித்தைவிட உயரமானவர் விஜய்

D)உயரங்களின் அடிப்படையில் நிற்கவைத்தால் இறங்கு வரிசையில் நான்காம் இடத்தில் நிற்பவர் ராஜீவ்

E)விடை தெரியவில்லை

96. A, B, C, D, E, F ஆகியோர் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர். D மற்றும் C –க்கு இடையே B அமர்ந்துள்ளார். E மற்றும் C – க்கு இடையே A அமர்ந்து ளார். D -க்கு வலப்பக்கத்தில் F அமர்ந்து ளார். எனில். A –க்கும் F – க்கும் இடையில் அமர்ந்து ளவர்.

A)D

B)E

C)C

D)B

E)விடை தெரியவில்லை

97. குமாரின் வயது அவரது மகனின் வயதைப் போல் 5 மடங்கு. 4 வருடங்களுக்குப் பிறகு, இருவரின் வயதுகளின் கூடுதல் 68. எனில், தற்போது மகனின் வயது என்ன?

A)10

B)12

C)15

D)17

E)விடை தெரியவில்லை

98. A என்பவர் D -யின் மனைவி, D என்பவர் B -யின் தந்தை, B மற்றும் C ஆகியோர் சகோதரிகள், எனில் A-என்பவர் 'C'-க்கு எவ்வகையில் உறவு?

A)தாய்

B)மகள்

C)சித்தி

D)அத்தை

E)விடை தெரியவில்லை

99. தினேஷ் வடக்கு திசையில் 7 கி.மீ.தூரம் சென்று பின்னர் தனது வலது புறம் திரும்பி 3.கி.மீ. தூரம் நடக்கிறார். பின்னர் மீண்டும் தந்து வலதுபுறம் திரும்பி 7 கி.மீ. முன்னோக்கி நடக்கிறார். எனில், புறப்பட்ட இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தொலைவில் உள்ளார்.

A)10 கி.மீ.

B)20 கி.மீ.

C)3 கி.மீ.

D)6 கி.மீ.

E)விடை தெரியவில்லை

100. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)ஒரே ஒரு இரட்டை பகா எண் - 2

B)மிகச்சிறிய ஈரிலக்க பகா எண் - 13

C)மிகப்பெரிய ஈரிலக்க பகா எண் - 97

D)ஓரிலக்க பகா எண்களின் எண்ணிக்கை - 4

E)விடை தெரியவில்லை

திருவேல் அகாடமி

*TNPSC Gr-2, 2A முதனிலை & முதன்மைத் தேர்வு – 2022*

திருவண்ணாமலை

*97901 46151 / 88707 60558 / 86673 31004*

மாதிரித் தேர்வு - *6*